# தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும்

**தொண்டைமானாறு**
**மக்களின்**
**வரலாறும், கலாச்சாரம், பண்பாடு**

# தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும்

(தொண்டைமானாறு மக்களின் வரலாறு, கலாச்சாரம், பண்பாடு பற்றிய நூல்)

ஆக்கியோன்:

## செ.நாகலிங்கம்

வெளியீடு:

வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்,

கனடா.

| | |
|---|---|
| நூலின் பெயர்: | தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும் - தொண்டைமானாறு மக்களின் வரலாறும், கலாச்சாரம், பண்பாடு பற்றியது. |
| ஆக்கியோன்: | செ.நாகலிங்கம் |
| முதற்பதிப்பு: | 4. 04. 1985 |
| இரண்டாம் பதிப்பு: | 19. 04. 2009 |
| பொறி அச்சமைப்பு: | உமா. நகுலசிகாமணி |
| வெளியீடு: | வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம், கனடா<br>Valvai Historical Document Conservation Center Canada.<br>www.vvthistory.com |

# மீள் பதிப்புரை

தொண்டைமானாறு வல்வெட்டித்துறையின் நகர சபையின் வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், மேலும் பல வரலாற்றுச் சிறப்புக்களை உடைய கிராமமாகும். இந்நூல் பருத்தித்துறை, எமது முந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தாய் மாமன் திரு.செ.நாகலிங்கம், ஓய்வு பெற்ற உதவிப்பணிப் பாளர் (தேசிய நூதனசாலை கொழும்பு) அவர்களால் ஆக்கப்பட்டது.

இந்த வரலாற்றுக் கட்டுரை, 1974ம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டில் திரு.செ. நாகலிங்கம் அவர்களால் ஆங்கிலத்தில் வாசிக்கப் பட்டது.

1619ம் ஆண்டு எமது யாழ்ப்பாணத்துத் தமிழாட்சி போர்த்துக்கேயரிடம் வீழ்ந்தது. தமிழ்ப்படையின் தலை வன் வர்ணகுலத்தான் பிடிபடாமல், தமிழ் நாட்டுக்குச் சென்று, பல தடைவ தொண்டைமானாறு, வல்வெட்டித் துறை, பூநகரிப் பகுதிகளில் தங்கிப் போரிட்டான். இறுதி யில் தமிழாட்சி வீழ்ந்தது.


1620ம் ஆண்டு பறங்கியரின் ஆட்சியில் யாழ்ப்பா ணமும் ஒன்றாயிற்று இதுபற்றி யாழ்ப்பாண வைபவ விமர்சனம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1928 பக்கம் 164ல், வைபவகௌமுதி க.வேலுப்பிள்ளை 1918, 65,67ம் பக்கங்களில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் மருமகன் திரு.துரைரத்தினம். (பா.உ) அவர்களின் மூன்றாவது புதல்வனுக்கு (பேரக்குழந்தைக்கு) வண்டையலூர் பரமேஸ்வரராசா என்னும் அரசனின் பெயரை வைத்துப் பெருமைப்பட்டார். வண்டையலூர் என்னும் ஊர் பெயர் தமிழகத்திலும் உள்ளது.


தொண்டைமானாற்று வரலாற்று நூலை இரண்டாவது பதிப்பாக மீள்பதிப்புச் செய்வதில் "வல்லை வரலாற்று ஆவணக்காப்பகம்" கடந்து வந்த பாதையில் தடம் பதிக்கின்றது.

19 -09 -2009

ந.நகுலசிகாமணி,
கனடா.




செல்வச்சந்நிதி ஆலயம்



தொண்டைமானாற்றுப் பாலம் ஈழப்போரினால்
சிதைவு அடைந்த நிலையில்



வீரமாகாளி
அம்மன் கோவில் தொண்டைமானாறு



[illegible]
பிள்ளையார் கோவில் தொண்டைமானாறு

# தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும்

தொண்டைமானாறு என்ற பெயரைக் கேட்டதும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகரையில் தொண்டை மானாறு என்ற உப்பாறு கடலுடன் சங்கமமாகும் இடத்துக்கு அருகாமையில், கடலுக்கும் ஆற்றுக்கும் கிழக்குப்பக்கமாக அமைந்து இருக்கும் தொண்டை மானாறு என்ற ஊரும், ஊரின் தென் கோடியில் உள்ள செல்வச்சந்நிதி என்ற இனிய பெயரை உடைய முருகன் ஆலயமும், இந்த இடங்களைத் தெரிந்த ஒருவரின் மனக் கண்முன் தோன்றும்.

அத்துடன் இந்த நாட்டின் அரசனுடைய அனுமதி யைப் பெற்று இங்கேயுள்ள கரணவாய், செம்மணி வெள்ளப் பரவை என்னும் இடங்களில் ஆண்டுதோறும் விளைந்து வந்த உப்பைச் சேகரித்து மரக்கலங்கள் மூலம் தன்னுடைய நாட்டுக்கு கொண்டு செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்காக தமிழ் நாட்டிலிருந்து இங்கே வந்த தொண்டைமான் என்ற அரசனைப் பற்றிய வரலாற்றுக் கதையும் எவருடைய ஞாபகத்திற்கும் வரக்கூடும்.

இதுவே யாழ்ப்பாண வரலாறு பற்றி நுட்பமாய் ஆராய்பவர்களைத் தவிர ஏனையோர் மத்தியில்

தொண்டைமானைப் பற்றி நிலவிவரும் வரலாற்றுக் கதையாகும். யாழ்ப்பாணப் பொதுமக்களை பொறுத்த வரை அவர்கள் இந்தக் கதையுடன் திருப்தியடைந்து விடுகின்றார்கள்.

இங்கே வந்த தொண்டைமான் அரசனா அல்லது சிற்றரசனா,அவன் தமிழ்நாட்டின் எந்த இடத்தில் இருந்தான், இங்கே என்ன காரணத்துக்காக வந்தான், எப்போ வந்தான்? இங்கே வந்தபின் என்ன செய்தான் என்பன போன்ற கேள்விகள் அவர்கள் மனதில் எழுவதில்லை.

தாய்நாட்டுத் தமிழர்களின் வரலாற்றைப் பார்க்கும் போது அங்கே கி. பி. 2ம்நூற்றாண்டின் முற்பகுதியில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை அரசு செய்த தொண்டைமான் இளந்திரை யனும் அவனுக்குப்பின் தமிழ்நாட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் தொண்டை மான் என்ற பெயரை வைத்திருந்த பலரை நாம் காண்கிறோம்.

இவர்களில் யாழ்ப்பாணத்திற்கு வந்த தொண்டை மான் யாரென்பதே இங்கே எழும் கேள்வி? இந்த விசயத்தை நன்கு ஆராய்ந்த இலங்கை வரலாற்று வல்லுனரும் ஆராய்ச்சியாளருமாயிருந்த முதலியார் இராசநாயகம் அவர்கள், இங்கே வந்த தொண்டைமான் 11ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 12ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலும் சோழச் சக்கரவர்த்தியாயிருந்த முதலாம் குலோத்துங்கனின் பிரதம படைத் தலைவனா யிருந்த தொண்டைமான் கருணாகரன்தான் என்று முடிவு செய்திருக்கிறார்.

இந்த முடிவு சரியென்பதே என்னுடைய தாழ்மை

யான அபிப்பிராயமுமாகும்.

குலோத்துங்கனின் கலிங்க வெற்றியைக் கொண்டாடு முகமாக அவனின் அவைப் புலவனாயிருந்த சயங் கொண்டார் என்பவர் *கலிங்கத்துப்பரணி* என்னும் நூலை இயற்றி அதை அரச சபையில் அரங்கேற்றினார். இந்த நூலில் சயங்கொண்டார் குலோத்துங்கனைப் புகழ்ந்து வாழ்த்திப் பாடியபின் சோழப் படைக்குத் தலைமை தாங்கி அந்தப் படையை கலிங்கதேசத்துக்கு நடத்திச் சென்று கலிங்கப் போரில் வென்று கலிங்க தேசத்தை மறுபடியும் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக்கிச் சோழநாடு திரும்பிய தொண்டைமான் கருணா கரனை யும் பின்வருமாறு புகழ்ந்து பாடியிருக்கிறார்.

*தொண்டையர் வேந்தனைப் பாடீரே*
*பல்லவர் தோன்றலைப் பாடீரே*
*வண்டை வளம்பதி பாடீரே*
*மறைமொழிந்த பதி மரலில் வந்தகுல*
*திலகன் வண்டைநகர் ராசன்*

இந்தப் புகழ் மாலைகளிலிருந்து தொண்டைமா னின் முன்னோர் தொண்டை மண்டல அரசர்களாய் இருந்தார்களென்றும் அவன் பல்லவப் பேரரசர்களின் வழித் தோன்றலென்றும், சோழநாட்டில் கன்னடநாட்டு எல்லைக்கு அண்மையில் இருக்கும் வண்டலூர் என்ற நகரை தலைநகராகக் கொண்டு அந்தப் பிரதேசத்தை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன் என்றும் தெரிய வருகின் றது.

இவனுடைய முழுப்பெயர் பல்லவராய திருவரங்க கருணாகரத் தொண்டைமான். திருவரங்க என்ற பெயரி லிருந்தும் தமிழ் நாட்டில் காணப்படும் தொண்டைமானு டைய ஒரு சமஸ்கிருதக் கல்வெட்டிலிருந்தும் இவன்

விஷ்ணு சமயத்தவன் என்பது உறுதியாகின்றது. இவன் யாழ்ப்பாணத்துக்கு ஏன் வந்தான் என்பதை இப்போ ஆராய்வோம்.

முதலாம் குலோத்துங்கன் அரசு செய்த காலத்தில் முதலாம் விசயபாகு என்பவன் இலங்கை அரசனாய் இருந்தான். அரசியல் காரணங்களுக்காக இவர்களுக் கிடையில் பகை தோன்றியது. இந்தப் பகையின் காரணமாக விசயபாகு தன்னுடன் தனி யுத்தத்திற்கோ படைகளைக் கொண்டு செய்யும் யுத்தத்திற்கோ வரும் படி குலோத்துங்கனுக்குச் சவால் விடுத்தான். என்று சிங்கள வரலாற்று நூலாகிய *மகாவம்சம்* கூறுகிறது. இந்தச் சவாலை ஏற்ற குலோத்துங்கன் தனது பிரதம படைத் தலைவனாகிய தொண்டைமானை ஒரு படையு டன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினான். இதுவே தொண்டைமான் யாழ்ப்பாணத்துக்கு வந்ததற்கு உண் மைக் காரணம்,

இது தவிர, தொண்டைமான் இங்கே வந்து யாழ்ப் பாண அரசனை போரில் வென்று யாழ்ப்பாணத்தைச் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக்கினான். அதன் பின் இந்நாட்டை அரசு செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து இந்த நாட்டின் பாதுகாப்புக்காக, இப்போ தொண்டைமானாறு என்று விளங்கும் இடத்தில் ஒரு படைத் தளத்தையும் அமைத்து இந்தப் படைகளின் தலைவர்களாகத் தன்னுடைய உறவினர்களான கங்க, பல்லவராச வம்சங்களைச் சேர்ந்தவர்களையே நிய மித்து அவர்களைத் தொண்டைமானாற்றில் குடியேற்றி வைத்தான். தொண்டைமான் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் இங்கே விளையும் உப்பு, தன்னுடைய நாட்டுக்குத் தேவையாக இருந்தபடியால் அதைச்

சேகரித்து மரக்கலங்கள் மூலமாக அங்கே கொண்டு செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தான்.

தொண்டைமான் காலத்திலும் பின்வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலும் தொண்டைமானாறு ஒரு படைத்தளமாய் இருந்தது என்பதற்கு வாழும் குடும்பங்களில் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாட்டுகளில் இருந்தும், இங்கே உள்ள காணிப் பெயர்களில் இருந்தும் நாம் காணக் கூடியதாய் உள்ளது.

சில குடும்பங்களிலிருக்கும் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடலில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன.

*கைக்கோ கனக வள்ளி*
*காலுக்கோ வீரதண்டை*
*தண்டையுமோ பொன்னாலே*
*தாழ்வடமோ முத்தாலே*

எங்களுடைய குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பட்டு இப்போ சிறிதுசிறிதாக மறைந்து கொண்டிருக்கும் நீண்ட தாலாட்டின் இறுதியில் பின்வருமாறு பாடுவார்கள்.

*என் பட்ட துறையே*
*படை முகத்தின் இராசாவே*
*நீ போருக்குச் சென்றிடுவாய்*
*பொழுதோடே வென்றிடுவாய்*
*வென்ற களரியிலே*
*வீரபட்டம் கூட்டிடுவாய்*

போர்க்களத்துக்குச் செல்லும்போது வீரக்கழல் அணிந்து செல்வது சத்திரியர்களின்வழக்கம். இந்த வழக்கம் தொண்டைமானாற்றில் இருந்து நெடுங்காலத்தி

ற்கு முன்பே மறைந்துவிட்டது. ஆனால் தொண்டை மானாற்றின் அயலூராகிய வல்வெட்டித் துறையில் இந்த வழக்கம் இற்றைக்கு ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்வரையில் நீடித்து இருந்தது

ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன், யான் சிறு பையனாய் இருந்தபோது வல்வெட்டித்துறையிலுள்ள முத்துமாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவுக்கு வேறு இளைஞர்களுடன் போயிருந்தேன். அங்கே வெள்ளி யாற் செய்யப்பட்ட வீரக்கழலும் அதற்கேற்ற வெள்ளி உடையும் அணிந்து கோயில் வாசலுக்கு நேராக வெளிவீதியில் நின்ற கம்பீரமான தோற்றமுடைய ஒருவரை என்னுடைய நண்பர்கள் எனக்குக் காட்டி, அவர்தான் இராசமாணிக்கம், வீரக்கழல் அணிந்து கோயிலுக்கு வந்திருந்தாரென்றால் அங்கே குழுமி யிருக்கும் மக்கள் மத்தியில் எதுவிதமான குழப்பங் களோ, சள்ளுச் சண்டைகளோ நடக்காது. இந்த இராச மாணிக்கம் தான் வல்வெட்டித்துறையில் வீரக்கழல் அணியும் வழக்கத்தை கடைசியாகக் கைக்கொண்டி ருந்தவர் என நம்புகிறேன்.

வீரராசேந்திர சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில் சோழப் படைகளுக்கும், சிங்களப் படைகளுக்கும் இலங்கையில் நடந்த ஒரு போரில் பொன்குழல் குருகுலத்தரையன் என்ற ஒருவன், சிங்களவரின் படைத் தலைவனாயிருந்தானென்றும், அவர் போர்க்களத்தில் பட்டு வீழ்ந்தவுடன் சிங்களப்படை பேரணியை உடைத் துக் கொண்டு பெரிய சத்தத்துடன் போர்க்களத்தை விட்டு புறமுதுகிட்டு ஓடினார்கள் என்று வீரராசேந்திரச் சக்கர வர்த்தியின் திருமுக்கூடல் கல்வெட்டு கூறுகின்றது.

தொண்டைமானாற்றிலுள்ள காணிகளிற் சில பின்

வரும் பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

1. அத்திப்படை ஆண்டவன் கொல்லை
2. நாயினிச்சியார் கொல்லை
3. சேதுபதியர் கண்டு
4. இராக்கா வளவு
5. பணிக்க வளவு

யாழ்ப்பாணக் கச்சேரியில் இருக்கும் தொண்டைமானாற்றின் தோம்பு ஏடுகளில் இக்காணிப் பெயர்களையும், ஆள்களின் பெயர்களையும் தொண்டைமானாற்றைப் பற்றிய பல வரலாற்று விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்திப்படை ஆண்டவன் கொல்லை என்பது யானைப் படைத் தலைவன் வாழ்ந்த இடம்.

நாயினிச்சியார் கொல்லை - நாயன் என்பது வன்னிய படைத் தலைவனின் பட்டப் பெயர்களிலொன்று. நாயினிச்சியார் கொல்லையென்றால் வன்னியர் படைத்தலைவன் ஒருவனின் மனைவி வாழ்ந்த இடம்.

சேதுபதியார் கண்டு என்பது சேதுபதிக் கண்டர் வாழ்ந்த இடம். கண்டர் என்பதும் வன்னிய படைத் தலைவர்களின் பட்டப் பெயர்களில் ஒன்று.

இராக்கா வளவு இந்த வளவில் இராக்கா என்னும் பெயரையுடைய படைத்தலைவர்கள் தலைமுறைகளாக வாழ்ந்து வந்ததாக தெரிகின்றது. இராக்காப்பனை என்றும் சொல்லப்படும். இந்தவளவு தொண்டைமானாற்றுப் பாலத்தின் கிழக்குத் தலைப்பிலிருந்து

ஏறக்குறைய 75 யார் தூரத்தில் செல்வச் சந்நிதிக்குப் போகும் பாதையில் கிழக்குப்பக்கமாக அமைந் திருக்கின்றது. இந்த இடத்தில்தான் ஆற்றின் மேற்குக் கரையிலிருந்து ஆற்றைக் கடக்கும் இடம் அமைந் திருந்தது. ஆற்றைக் கடந்து அரச கோட்டமாக இருந்த வடமராட்சிக்குள் செல்லும் யாவருக்கும் இராக்கா குடும்பத்தைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்ட பின்னரே மேலும் செல்ல அனுமதிக் கப்பட்டார்கள். இராக்கா என்ற பெயரைக் கொண்ட பலர் இலங்கை அரசர்களாயிருந்த விக்கரமவாகு, முதலாம் பராக்கிரமபாகு ஆகியவர்களின் கீழ் படைத் தலைமை பூண்டிருந்தார்கள் என்றும் படை களில் அவர்கள்வகித்த பதவிகளையும் *மகாவம்சம்* விபரமாகக் கூறுகின்றது. 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் யான் வாசித்த ஓர் ஆங்கிலக் கட்டுரையிலும் இந்த இராக்கர் குடும்பத்தினரைப் பற்றிய விபரங்களைக் கொடுத்திருக்கின்றேன்.

பணிக்க வளவு: இது பணிக்கர் எனப்பட்ட ஒரு குடும்பத்தினர் வாழ்ந்த இடம். இந்த வளவு தொண்டை மானாற்றில் பிரபல்யம் பெற்ற இடங்களில் ஒன்று. இங்கே பணிக்கக் கிணறு என்று மக்களாற் சொல்லப் படும் கிணறு ஒன்று இருக்கின்றது. இந்தக் கிணறும், தொண்டைமானாற்றிலுள்ள கிணறுகளில் மிகவும் பிரசித்தி பெற்ற மூன்று நான்கு கிணறுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பணிக்கரென்ற பெயரின் பொருள் பேராசிரியர் என்பதே என்றாலும் அந்தப் பெயர் வாள் வித்தையில் திறமை பெற்ற பேராசிரியரையே அநேக மாகக் குறிக்கும். எத்தனையோ படைத் தலைவர்கள் வாழ்ந்த தொண்டை மானாற்றில் அவர்களுக்கு வாள் வித்தை கற்பிப்பதற்காக அந்த விந்தையில் திறமை

பெற்ற பேராசிரியர்களைக் கொண்ட ஒரு குடும்பம் இருந்தது. ஆச்சரியப் படத்தக்கது ஒன்றல்ல.

இங்கே நாம் சிங்கள வரலாற்றில் உள்ள ஒரு சம்பவத்தைக் கவனிப்போம். மலை நாட்டில் இருந்து வந்த வாள் வித்தையிற் திறமை பெற்ற பணிக்கன் என்ற ஒருவன் சிங்கள அரசனாகிய பராக்கிரமபாகுவிடம் சென்று வாள் வித்தையில் தான் பெற்றிருந்த திறமையைக் காட்டினானென்றும், அதைப் பார்த்த அரசன் தன்னுடைய குடும்பத்தில் இருந்த ஒரு அரசகுமாரியை அந்த பணிக்கனுக்கு விவாகம் செய்து கொடுத்தானென்றும் *மகாவம்சம்* கூறுகின்றது. இந்தப் பணிக்கனுக்கும் சிங்கள இராசகுமாரிக்கும் பிறந்த மகனை சிங்களத்தில் **சப்புமால் குமாறாய என்றும் தமிழில் செண்பகப் பெருமாள்** என்றும் அழைக்கப்பட்டான். இவன் இளைஞனாய் இருந்த போதே யாழ்ப்பாணம் மீது படை எடுத்து வந்து அப்போ நாட்டின் அரசனாய் இருந்த கனகசூரிய சிங்கை ஆரியனை வென்று சில ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை அரசு செய்திருந்தான். பின்னர் இவன் யாழ்ப்பாண அரசின் தலைநகராயிருந்த சிங்கபுரம் என்ற நகரரையழித்து நல்லூரைப் புதிய தலைநகராக்கி அங்கே கந்தசாமி கோயிலையும் கட்டுவித்தான். பின்னர் புவனேகவாகு என்ற பெயருடன் இலங்கையரசனானான். மலைநாட்டிலிருந்து வந்தவனென்று சொல்லப்பட்ட இவனுடைய தந்தையாகிய பணிக்கன் தொண்டைமானாற்றில் இருந்துதான் சிங்கள நாட்டுக்குச் சென்றான் என்று எண்ணக்கூடியதாய் இருக்கின்றது.

தொண்டைமானாற்றில் இருந்த படைத்தளத்திற்கு தொண்டைமானின் உறவினர்களாகிய கங்க, பல்லவ

சிற்றரச குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தலைமை பூண்டிருந்தார் கள் என்றும் அவர்களின் பழைய நாடு ஒரு மலைநாடென்றும் இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். தொண்டைமானாற்றிலுள்ள எங்கள் குடும்பங்களில் ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக் குடும்பங்களிற் பிறந்த ஒரு குழந்தையை முதன் முதல் நீராட்டும்போது பின்வரும் வரிகளைச்சொல்லி நீராட்டுவார்கள்.

*காசுப் பையோடு வந்தாயோ தம்பி*
*அந்தக் காசுமலைநாடும் கண்டுவந்தாயோ தம்பி*
*மஞ்சல் பையோடு வந்தாயோ தம்பி*
*அந்த மஞ்சல்மலைநாடும் கண்டுவந்தாயோ தம்பி*
*அரிசிப்பையோடு வந்தாயோ தம்பி*
*அந்த அரிசிமலைநாடும் கண்டு வந்தாயோ தம்பி*
*உள்ளிப் பையோடும் வந்தாயோ தம்பி*
*அந்த உள்ளிமலைநாடும் கண்டுவந்தாயோ தம்பி*

இவைகளைப் போன்ற பல வரிகளைச் சொல்லி பிள்ளையை நீராட்டுவார்கள். இந்த வசனங்களில் இருந்தும் தொண்டைமானாறிற் குடியேறிய பிரதான குடும்பங்கள் ஒரு மலைநாட்டில் இருந்தே இங்கு வந்தார்கள் என்பது தெரியவருகின்றது.

சிங்கள அரசர்கள் தொண்டைமானாற்றின் வரலாற்றை நன்கு அறிந்து இருந்தார்கள் போலும், அதனாலேதான் எங்கேயோ இருந்துவந்த ஒரு பணிக்கனுக்கு பராக்கிரமபாகு மன்னன் தனது குடும்பத்திலுள்ள ஒரு இராசகுமாரத்தியை அதிக தாமதமின்றித் திருமணம் செய்து கொடுத்தான் போலும்.

தென்னிலங்கையிலுள்ள இன்று ஜயவர்த்தனபுர மென்று சொல்லப்படும் கோட்டையைக் கட்டிய காஞ்சிபுரத்தான் கிரிவம்சசேகரன் என்ற பட்டப் பெயர் களைத் தாங்கியிருந்த அழகைக்கோன் என்றும் அழகேஸ் வரனென்றும் அழைக்கப்பட்டவனும் தொண்டைமா னாற்றில் இருந்துதான் தென்னிலங்கைக்கு சென்றான் என்றும் கருதப்படுகின்றது.

காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகரம். கிரநாதன் சங்க அரசர்களின் பட்டங்களில் ஒன்று. இந்த இரண்டு குடும்பங்களும் ஒன்றாகக் கலந்து இருந்தது தொண்டை மானாற்றில்தான். இப்போ பணிக்க வளவில் இன்று மிருக்கும் பணிக்கக் கிணற்றின் வரலாற்றைப் பார்ப் போம். யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் தொண்டைமானாற்றில் பதினைந்து கிணறுகள் வரையில் இருந்ததாகத் தெரிகின்றது. இந்தக் கிணறுகள் ஏதோ காரணங்களுக்காகப் பிரசித்தி பெற்றிருந்தன. இந்த மூன்று நான்கு கிணறுகளில் பணிக்கக் கிணறும் ஒன்று. பிற்காலத்தில் தொண்டைமானாற்றில் வீட்டுக்கொரு கிணறு தோன்றியிருந்தாலும் திருமணம் செய்யப் போகும் ஒரு பெண்ணை அவளின் வீட்டுக் கிணற்றில் நீராடாமல் மேலே சொல்லப்பட்ட மூன்று நான்கு கிணறுகளில் ஒன்றுக்கு அழைத்துச் சென்று முறைப் படி நீராடியபின் புதிய உடை உடுத்து, பின்வருவன போன்று வாழ்த்துப் பாட்டுக்களுடன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள், வீட்டுக்குச் சென்றபின் மணமகளை மேலும் அலங்கரித்து மணமகனின் வருகையை எதிர்பார்த்து இருப்பார்கள்.

1.

*ஈரத்துகில் களைந்து இழைசேர்ந்த பட்டுடுத்தி*
*நனைந்த துகில் களைந்து நாகரீக பட்டுடுத்தி*
*சோமன் உடுப்புடுத்தி சொருகு தொங்கல் ஆர்க*
*விட்டு*
*பட்டுப் பளபளக்க பாடகக்கால் சோதிமின்ன*
*முத்து மினுமினுக்க மோதிரக்கால் சோதிமின்ன*
*கொண்டு புறப்படுங்கோ எங்கள் கோலவரிப்*
*பொம்பிளையை*
*வாழ்த்திப் புறப்படுங்கோ எங்கள் வண்ண வரிப்*
*பொம்பிளையை.*

2.

*ஆண்பெற்றார் வாசலிலே ஆடவில்லை*
*பாடவில்லை*
*பெண்பெற்றார் வாசலிலே ஆடலுண்டு*
*பாடலுண்டு*
*பெட்டிவரும் பேழைவரும் பொன்னான*
*தாலிவரும்*
*மஞ்சற் குதிரையிலே அழகான மாப்பிளையும்*
*வந்திறங்குவார்.*

மஞ்சட் குதிரை என்பது மஞ்சள் நிறப்பட்டினால் அலங்கரிக்கப்பட்ட ஒரு குதிரை போலும். மணமகன் குதிரையில் ஏறிவரும் வழக்கம் தொண்டை மானாற்றில் ஒரு போதும் இருந்தது இல்லை என்று சொல்லலாம். மேலே சொல்லப்பட்ட பிரதான குடும்பங்கள் தமிழ் நாட்டில் இருந்த போதுதான் அவர்கள் மத்தியில் இந்த வழக்கம் இருந்தது போலத் தெரிகின்றது. மாப்பிளை பெண் வீட்டுவாசலை வந்து அடைந்ததும் சுமங்கலிகள் கூட்டமாகச் சென்று மாப்பிளையை முறைப்படி

வரவேற்றபின்:

*வரவிடுங்கோ வரவிடுங்கோ*
*அந்த மானுடனை மாளிகைக்கு*

என்ற பாட்டைப்பாடி அவரை வீட்டினால் அழைத்துச் சென்று அவருக்குரிய ஆசனத்தில் அமரச் செய்வர். பின்னர் மணமகளையும் வாழ்த்துப் பாட்டுக்களுடன் அழைத்து வந்து அவருக்குரிய ஆசனத்தில் இருத்திய பின் திருமணம் முறைப்படி நடைபெறும்.

இப்படியான பல சிறப்புக்களைப் பெற்றிருந்த தொண்டைமானாற்றிலிருந்த மக்கள் நல்ல கடவுள் பக்தர்களாக இருந்தார்கள் என்பதற்கு இங்கேயுள்ள கோயில்கள் சான்று பகர்கின்றன. தொண்டைமானாற்றின் கிழக்குப் பக்கத்தில் தெற்கிலிருந்து வடக்காக செல்வச்சந் நிதி கோயில், கோணேசர் கோயில், ஆதிவைரவர் கோயில், பிள்ளையார் கோயில், பத்திர காளியம்மன்கோயில், வீரமாகாளியம்மன் முதலிய கோயில்கள் அமைந்திருப்பதை யாரும் பார்க்கலாம். வீரமாகாளியம்மன் படைவீரர்களின் தெய்வமானதால் போலும் யாழ்ப்பாண அரசனாயிருந்த பரராசசேகரன் இக்கோயிலைக் கட்டுவித்தானென்று கச்சேரியிலுள்ள கோயில் இடாப்பில் குறிக்கப்பட்டிருக்கும் விபரங்களில் இருந்து நாமறிகின்றோம்.

தொண்டைமானாற்றில் உள்ள வீரமாகாளியம்மன் கோயிலும், நல்லூரில் உள்ள வீரமாகாளிஅம்மன் கோயிலும், யாழ்ப்பாண அரசர்களினாலேயே கட்டப் பட்டவை என்பதற்கு இவ்விரண்டு கோயில்களின் ஆதீன கர்த்தர்களும் இன்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதிலிருந்து உறுதியாகின்றது.

கோணேசர்கோயில் பறங்கியரால் இடிக்கப்பட்ட பின் இப்போ சிறு கோயிலாக இருக்கின்றது. பழைய கோணேசர் கோயிலை இடித்து, பறங்கிகள் கத்தோலிக்க சமய தேவாலயத்தைக் கட்டினார்கள் என்று முதலியார் இராசநாயகம் அவர்களின் யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது. அதே தேவாலயத்தின் அத்திவாரம் இப்போது இருக்கும் சிறிய கோணேசர் கோயிலின் பின்பக்கமாக இருப்பதை யாவரும் பார்க்கலாம். செல்வச் சந்நிதி கோயிலைத் தவிர மற்றக் கோயில்கள் யாவும் தொண்டைமான் காலத்துக்குப் பின்னரே கட்டப்பட்டன.

இப்போ தொண்டைமானின் வருகையை ஒரு எல்லைக் கோடாக வைத்துக் கொண்டு தொண்டை மானாற்றினதும் செல்வச்சந்நிதியினதும் தொண்டை மானுக்கு முந்திய வரலாற்றை கூடியளவு ஆராய்வோம்.

தொண்டைமானாற்றில் நெய்தலும், மருதமும், முல்லையும், நெருங்கி உறவாடுகின்றன. இந்த இடம் தெற்கிலிருந்து வடக்காக பசும் புற்றரைகளாலும், பனம் தோப்புக்களாலும், செழிப்பான தோட்ட நிலங்களாலும், சூழப்பட்டிருக்கின்றது. இங்கே நன்னீரும் ஏராளமாக உண்டு. மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல வசதிகளைக் கொண்ட இந்த இடத்தில் பன்னெடுங் காலமாக மனிதர் வாழ்ந்திருந்தார்கள் என்றால் அது தவறாகாது.

அப்படி என்றால் தொண்டைமானின் வருகைக்கு முன் இந்த இடத்துக்கு என்ன பெயர் இருந்தது என்ற கேள்வி எழுகின்றது.

மகாபாரதத்தில் அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் வரும் சில விபரங்களிலிருந்து இந்த

ஊருக்கு மணலூர் என்றபெயர் இருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பெயரை மணவை என்றும் மக்கள் சொன்னார் கள் போலும். தொண்டைமானாற்றின் ஆற்றங்கரை யோரமாகவும், கடலோரமாகவும் இருக்கும் அநேக நிலங்களுக்கு மணற்கொல்லை என்ற பெயரே உறுதி களிற் காணப்படுகின்றது. இத்துடன் தொண்டைமானா ற்றின் தொண்டைமானுக்கு முந்திய வரலாற்றை விட்டு செல்வச்சந்நிதியின் வரலாற்றைப் பார்ப்போம்.

இந்தக் கோயில் தொண்டைமானுடன் வந்த வர்களாலோ அல்லது வேறுயாராலுமோ தோற்றுவிக்கப் பட்டதாகவோ வரலாறோ, கர்ண பரம்பரைக் கதைகளோ எதுவும் தொண்டைமானாற்றில் இல்லை.

இந்த இடம் தொண்டைமானுக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே வணக்கத்திற்குரிய ஒரு புனித தலமாக இருந்தது என்றும், இந்த இடத்தில் தவத்தில் ஈடுபடுவோர் இந்த இடத்தை தங்களின் உறைவிடமாகக் கொண்டிருந்தார்கள் என்பதுவும் தொண்டைமானாற்று மக்கள் மத்தியில் நிலவிவரும் கர்ணபரம்பரைக் கதை. இந்தக் கதையை தொண்டைமானுடன் வந்தவர்கள் இந்த இடத்தில் தங்களுக்குமுன் வசித்தவர்களிடமிருந்தே தெரிந்து கொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை,

ஆனால் உப்பாற்றங்கரையிலுள்ள ஒரு இடத்தை தபோதனர்கள் தங்கள் உறைவிடமாகக் கொண்டிருந் தார்கள் என்ற கதையை சிந்தனையாளர்கள் சந்தேகிப்ப தோடு மறுத்துப் பேசவும் கூடும்.

1950ம் ஆண்டிலிருந்து 1952ம் ஆண்டின் இறுதி வரை வடமாகாண வித்தியாதிகாரியின் அலுவலகத்தில் அவருடைய உதவியாளராகக் கடமையாற்றினேன்.

அந்தக் காலத்தில் வடமாகாணத்திலுள்ள சிங்களப் பள்ளிக் கூடங்களைக் கவனிப்பவராகவும், அவர்களின் வித்தியாதரிசியாகவும் *வெலகெதற* என்ற ஒரு சிங்கள வர் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அவர் சிலசமயங்களில் என்னுடன் உரையாடுவ துண்டு. ஒரு நாள் யான் தொண்டைமானாற்றில் வசிப் பவரென்று அவருக்குச் சொன்னேன். அதைக்கேட்டதும் அவர் பின்வருமாறு எனக்குச் சொன்னார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணக் குடாநாடு தென்னிலங்கையில் ஒரு பகுதியாயிருந்தது, என்றும் இடைக்காலத்தில் பூகம்பத்தினாலோ அல்லது இயற்கைக் கோளாறுகளினாலோ யாழ்ப்பாணக் குடா நாடு தென்னிலங்கையிலிருந்து ஆனையிறவுக் கடலால் பிரிக்கப்படுமுன் கனகராயன் ஆறு, இப்போ தொண் டைமானாறு என்று சொல்லப்படும் உப்பாறுகளின் படுக்கை மூலமாக ஓடி பாக்கு நீரிணையிற் சங்கம மாயிற்றென்றும் அவர் சொன்னார்.

அந்தக்காலத்தில் தொண்டைமானாறு எனப்படும் உப்பாறு நன்னீர் ஆறாக இருந்ததென்றும் அவர் மேலும் சொன்னார். அது சரியான அபிப்பிராயமும், தொண்டை மானாறு நன்னீராக இருந்த காலத்தில் செல்வச்சந்நிதி இப்போ இருக்குமிடத்திலும் அதற்கருகாமையிலும் தபோதனர்கள் தங்கி தவம் செய்தார்கள் என்றால் நம்பக் கூடியதே.

செல்வச்சந்நிதியின் தெற்குவீதியிலும் தொண்டை மானாற்றிலிருந்து காங்கேசன்துறைக்குப் போகும் வீதியில் வடக்குப் புறமாகவும் மருத மரங்கள் காணப் படுகின்றன. இந்த இடத்தை மருதடி என்றே இன்றும் சொல்லுகின்றார்கள்.

மருதமரம் மருதநிலத்துக்குரிய ஒரு மரம். உப்பாற்றங் கரையில் இயற்கையாக அது உண்டாவதில்லை. இதிலிருந்தும் தொண்டைமானாறு எனப்படும் இவ்வுப்பாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு நன்னீராறாகவே இருந்தது என முடிவு செய்யலாம். அந்தக்காலத்தில் செல்வச்சந்நிதி கோயில் இப்போ இருக்கும் இடத்தில் யாரோ ஒரு தபோதனர் தங்கியிருந்தார் என்றும் அவர் இப்போ இருக்கும் நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையிலுள்ள பூவரசம் மரம் நிற்குமிடத்தில் சமாதியானார் என்ற கர்ண பரம்பரைக் கதையும் தொண்டைமானாற்றில் நிலவி வருகிறது.

அந்தக்காலத்தில் இருந்தே இந்த இடம் வணக்கத்துக்குரிய ஒரு புனித இடமாகக் கருதப்பட்டது போலும்.

இந்தக் கதையிலிருந்து செல்வச் சந்நிதியின் தொன்மையை யாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். அந்தக் காலத்திலிருந்து தொண்டைமானின் வருகை வரையுமுள்ள செல்வச்சந்நிதியின் இடைக்கால வரலாற்றைப்பற்றி எதையும் நாம் உறுதியாகச் சொல்ல முடியாது.

தொண்டைமானாறு மற்ற ஊர்களால் நெருக்கப் படாத ஒரு தனியூராக இருக்கிறபடியால் தொண்டைமானாற்றில் அந்தக் காலத்தில் இருந்த மக்களே இந்த இடத்தில் ஒரு சிறு கோயிலைக் கட்டி சிவனையோ அல்லது முருகனையோ வணங்கி வந்தார்களென்று ஊகிக்கலாமே தவிர உறுதியாகச் சொல்ல முடியாது. இன்றும் செல்வச் சந்நிதியில் முருகனும் நாகதம்பிரான் என்ற பெயருடன் சிவனும் வணங்கப் படுவது யாவரும்

அறிந்ததே.

இதுவரை தொண்டைமானாற்றின் தொண்டைமானுக்கு முந்திய வரலாற்றையும் பிந்திய வரலாற்றின் ஒரு பகுதியையும் பார்த்தோம். அத்துடன் செல்வச் சந்நிதியின் இதுவரை தொண்டைமானுக்கு முந்திய வரலாற்றையும் இயன்றளவு ஆராய்ந்தோம்.

இப்போ தொண்டைமானாற்றினதும் செல்வச் சந்நிதியினதும் தொண்டைமானுக்குப் பிந்திய வீர வரலாறுகளைப் பார்ப்போம்.

தொண்டைமானாற்றின் வீர வரலாறு யாழ்ப்பாணத் தமிழரசின் மறைவுக்குப் பின்னும் சில ஆண்டுகள் நீடித்திருந்தது. தொண்டைமானாற்றின் சமூகச் சிறப்புக் கள் யாழ்ப்பாண அரசின் மறைவுடன் பெருமளவு மறைந்து போயின என்றாலும் முற்றாக மறைந்து போகவில்லை. அந்தசிறப்புக்களின் எஞ்சியிருந்த பகுதியும் இற்றைக்கு ஏறக்குறைய 60 ஆண்டுகளின் முன் முற்றாக மறைந்து போயிற்றென்றாலும் அவை பற்றி சிலரின் ஞாபகத்தில் இருந்தவைகளையே இந்தக் கட்டுரையில் எழுதுகிறேன்.

கி. பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துக்கேயர் எனப்பட்ட ஒரு ஐரோப்பிய சாதியினர் யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசனைக் கண்டு தாம் வியாபரம் செய்வதற்காக இங்கு வந்ததாகச் சொல்லி அதற்கு வேண்டிய அனுமதியைய்யும் பெற்றார்கள்.

காலப் போக்கில் யாழ்ப்பாண மக்களிடத்தில் இருந்த சாதிப் பாகுபாடுகளையும் அவைகளின் காரண மாக மக்கள் மத்தியிலிருந்து வந்த ஒற்றுமையீனத்தையும் கண்டு போலும் போத்துக்கேயர் யாழப்பாண அரசின்

உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடத்தொடங்கி னார்கள்.

இதனால் யாழ்ப்பாண அரசருக்கும் போத்துக்கேயர் களுக்கும் இடையில் பகையுண்டாயிற்று. இந்தப் பகையின் காரணமாக இருபகுதியினருக்கும் இடையில் ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக, சிறிய போர்களும் பெரிய போர்களும் நடந்து வந்தன. இந்தப்போர்களில் ஒன்றின் விளைவாகப் போர்த்துக்கேயர், மன்னாரைக் கைப்பற்றி அங்கே ஒரு கோட்டையைக் கட்டி படைகளை வைத்திருந்தார்கள்.

யாழ்ப்பாண அரசின் இறுதிக் காலத்தில் சங்கிலி குமாரன் என்ற பெயரையுடைய அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் யாழ்ப்பாண அரசின் பாதுகாவலனாக இருந்தான். பெரிய தேச பக்தனாகவும் இருந்த இவன் போத்துக்கேயரின் நாடு பிடிக்கும் முயற்சியையும் யாழ்ப்பாண மக்களிடையே தங்கள் மதமாகிய கத்தோலிக்க மதத்தைப் புகுத்தும் முயற்சியையும் பலமாக எதிர்த்தான். என்றாலும் யாழ்ப்பாண மக்களில் ஒரு பகுதியினர் சங்கிலியை எதிர்த்து கலகங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலத்தில் கரையான் சிற்றரசன் என்றும், போத்துக்கேயரின் பெரிய சத்துரு என்றும் குவைறோஸ் என்ற போத்துக்கேய மதகுருவால் எழுதப்பட்ட இலங்கை வரலாற்று நூலில் வர்ணிக்கப்பட்ட ஒருவன், தமிழ் நாட்டிலிருந்து ஒரு படையுடன் சடுதியாய் யாழ்ப்பாணத்துக்கு வந்து. சங்கிலிக்கு எதிராகக் கலகம் செய்து கொண்டிருந்தவர்களை அடக்கி இங்கே சமாதானத்தை நிலைநாட்டினாடன் என்றும், அந்த நூல் கூறுகின்றது.

ஆனால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை அமைதியாக இருக்கவிடவில்லை சங்கிலிக்கு எதிராய் அவர்கள் கொண்டிருந்த பகையினாலும் யாழ்ப்பாண மக்களிற் சிலரின் தூண்டுதல்களினாலும் கொழும்பிலி ருந்தும் மன்னாரிலிருந்தும் ஒரு பெரும்படையைத் திரட்டி நல்லூருக்கு வந்து கி. பி. 1619ம் ஆண்டில் சங்கிலியுடன் ஒர் பெரும்போரைத்தொடக்கினார்கள்.

இந்தப் போரில் மேலே சொல்லப்பட்ட கரையாரச் சிற்றரசன் 20 ஆயிரம் வீரர்களைக் கொண்ட ஒரு படையுடன் சங்கிலிக்குதவியாக நின்றான் என்றும் அதே நூல் கூறுகின்றது.

என்றாலும் இந்தப்போரில் இருவரும் தோல்வி யடைந்து தமிழ் நாட்டுக்கு கப்பல் மூலம் செல்வதற்கு முயன்றார்கள் என்றும் ஆனால் சங்கிலி பருத்தித் துறைக்கு நேராக கடலில் போர்த்துக்கேயரால் பிடிக்கப் பட்டு கோவாவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தூக்கிலிடப்பட்டான் என்றும் அதே நூல் கூறுகின்றது.

இத்துடன் யாழ்ப்பாணத் தமிழரசும் முடிவடைந் தது. பின்னர் போர்த்துக்கேயரே யாழ்ப்பாணத்தை ஆளத்தொடங்கினார்கள்.

கரையாரன் சிற்றரசன் பிடிபடாமல் தமிழ் நாட்டுக் குச் சென்று தஞ்சாவூர் நாயக்க அரசனிடம் படைகள் பெற்று பலதடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போரிட்டும் வெற்றி பெறவில்லை.

கடைசியாக தஞ்சாவூர் நாயக்கரிடம் ஒரு பெரும் படையைப் பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து தொண் டைமானாற்றில் இறங்கி அங்கேயுள்ள கோணேசர் குளத்திற்கு தெற்கிலிருக்கும் வயல் வெளியில் படையு

டன் தங்கி இருந்தானென்றும் இந்தப் படையின் வருகையை எதிர்பார்த்து பருத்தித்துறையில் தங்கி யிருந்த போர்த்துக்கேயப் படை இதை அறிந்ததும் இரவோடிரவாக நெல்லியடிப் பாதையால் அமைதியாக தொண்டைமானாற்றுக்கு வந்து அங்கே தங்கி இருந்த தமிழர் படையைச் சடுதியாகத் தாக்கினார்கள் என்றும் அதன்பின் தொண்டைமானாற்றில் இரண்டு நாட்களாக நடந்த போரில் தமிழர் படையின் தலைவன் கொல்லப் பட்டான் என்றும் ஈற்றில் போர்த்துக்கேயரே வெற்றி அடைந்தார்கள் என்றும் அந்த நூலில் கொடுக்கப் பட்டிருக்கும் விபரங்களிலிருந்து தெரிகிறது.

கொல்லப்பட்ட படைத் தலைவனின் தலைசற்றே வெண் தலையாயிருந்தது என்றும் அவன் நரைக்கத் தொடங்கிய ஒரு அழகான தாடியை உடையவனாக இருந்தானென்றும் அதே நூல் கூறுகிறது. அவனுடைய தலையை வெட்டி ஒரு தட்டத்தில் வைத்து வெள்ளைச் சீலையால் மூடி அதை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று அங்கே இருந்த போர்த்துக்கேய தேசாதிபதியின் முன் அவனுடைய பார்வைக்காக வைத்தார்கள் என்றும் அதே நூல் மேலும் கூறுகிறது.

போர்த்துக்கேயரின் இவ்வளவு கவனத்துக்கும் மரியாதைக்கும் உரியதாயிருந்த இந்தத் தலைக்குரிய படைத் தலைவனின் பெயரை அந்த நூல் சொல்லாத படியால் இவன் யாரென்ற கேள்வி இங்கே எழுகின்றது.

1974ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் யான் வாசித்த ஒரு ஆங்கிலக் கட்டுரையில் இந்தப் படைத் தலைவன் யார் என்ற விடயத்தை நான்கு ஆராய்ந்து அவன் கரையாரன் சிற்றரசன் என்றும், போர்த்துக்கேயரின் பெரிய சத்துரு

வென்று விபரிக்கப்பட்டவனென்றும் இவன் தொண்டை மானாற்றில் வாழ்ந்த கங்க பல்லவ சிற்றரசர் குடும்பத் தின் தலைவன் என்றும் முடிவு செய்து இருக்கின்றேன். இவனுடைய மறைவுடன் தொண்டைமானாற்றின் வீர வரலாறு முடி வடைந்தது.

இப்போ செல்வச் சந்நிதியின் தொண்டைமானுக் குப் பிந்திய வரலாற்றைப் பார்ப்போம். முன் சொல்லப் பட்ட ஐந்து கோவில்களையும் கோணேசர் கோயிலுக்கு அருகாமையில் இருக்கும் கோணேசர் குளம், பத்திர காளி அம்மன் கோயிலுக்கு அண்மையில் இருக்கும் பிரமர் குளம், பிள்ளையார் கோயிலின் கிழக்கு வீதியில், வீதியிலிருந்து இற்றைக்கு ஏறக்குறைய 50 ஆண்டுக ளின் முன் தூர்க்கப்பட்ட குளம் ஆகிய மூன்று குளங்களையும் உண்டாக்கிய தொண்டைமானாற்று மக்கள் செல்வச்சந்நிதியை கவனிக்காமல் விட்டிருப் பார்களா?

அவர்கள் செல்வச் சந்நிதி இன்று இருக்கும் இடத்தில் தொண்டைமானுக்கு முன்பு இருந்ததாக எண்ணக் கூடிய சிறிய கோயிலைப் பெருப்பித்து அதன் தீர்த்தக் குளத்தையும் வெளிவீதியில் மேற்குப் பக்கத்தி லிருக்கும் குளத்தையும் வெட்டுவித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தொண்டைமானுக்குப் பின் யாழ்ப்பாணத்தை அரசு செய்த ஆரிய அரசர் காலத்தில் இந்தக் கோயில் சிறப்புடன் இருந்தது என்றும் சிறப்புடன் தொண்டை மானற்று மக்களின் பராமரிப்பில் இருந்து வந்தது என்றும் சொல்லலாம்.

யாழ்ப்பாண அரசரை வென்று தங்கள் ஆட்சியை நிறுவிய போர்த்துக்கேயர் அந்தக் காலத்தில் யாழ்ப்பா

ணத்தில் இருந்த கோயில்கள் யாவற்றையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள் என்று யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் கூறுகின்றது.

போர்த்துக்கேயர் 39 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆண்டபின் ஒல்லாந்தர் என்ற வேறொரு ஐரோப்பிய சாதியினர் 1658ல் யாழ்ப்பாணத்தைப் போர்த்துக் கேயரிடமிருந்து கைப்பற்றி ஏறக்குறைய 150 ஆண்டுகள் வரையில் அரசு செய்து வந்தார்கள்.

இவர்களுடைய ஆட்சியின் பிற்பகுதியில் யாழ்ப் பாணத்தில் பல இடங்களில் போர்த்துக்கேயரால் இடிக் கப்பட்ட கோயில்கள் மக்களால் திருப்பிக்கட்டப் பட்டன.

அப்படிக் கட்டப்பட்ட கோயில்களில் ஒன்று தான் செல்வச்சந்நிதியும். இந்தக் காலத்தில் முருகப் பெருமான் தொண்டைமானாற்றில் வாழ்ந்து வந்த மீன் பிடிக்கும் தொழிலைக் கொண்டிருந்த மருதர் கதிர்காமர் என்பவருக்குப் பல அற்புதங்களைக் காட்டி செல்வச் சந்நிதி இப்போ இருக்கும் இடத்தில் தனக்குப் பூசை செய்யுமாறு பணித்தாரென்றும், அந்த ஆணையின் படியே மருதர் கதிர்காமர் செல்வச்சந்நிதி கோயிலைக் கட்டி பூசை செய்துவந்தார் என்றும் கதைகளும் அந்தக் காலத்திலிருந்தே தொண்டை மானாற்றில் சொல்லப் பட்டு வருகின்றன.

இந்தத் தலத்திற்கு செல்வச்சந்நிதி என்ற பெயர் மருதர் கதிர்காமராலேயே கொடுக்கப்பட்டது போல் தோன்றுகின்றது.

வள்ளியின் திருமணமும் அதை ஒட்டிய கோலாகல கொண்டாட்டங்களுந்தான் செல்வச்

சந்நிதியில் நடக்கும் ஆண்டுவிழா. இந்தவிழாக் காலத்தில் தொண்டைமானாற்று மக்கள் திருமணம் செய்வதில்லை.

இந்தக் கட்டுரையில் எழுதப்பட்டிருக்கும் விசயங்கள் யாவும் என்னுடைய ஞாபகத்தில் இருந்தே எழுதப்பட்டன. இதில் குறை குற்றங்கள் இருந்தால் அவைகளைப் பொறுத்துக் கொள்ளுமாறு வாசகநேயர்களைக் கேட்டுக் கொண்டு இதை இத்துடன் முடிக்கின்றேன்.

செ.நாகலிங்கம்
தொண்டைமானாறு 4-04 -1985



சின்ன மண்டபம்

மிக்கப்பிள்ளையின் கலகம்.— இதுநிகழ்ந்து முடிந்தும் முடியாமுன்னரே மன்னாருக்கோடிப் பறங்கியரைச் சரணடைந்திருந்த மிக்கப்பிள்ளை ஆராய்ச்சி அவர்களுக்கும் விரோதியாகித் தஞ்சாவூருக்கோடி அங்கிருந்து ஆயிரம் படைவீரரோடு தொண்டைமானாற்றில் தோற்றினான். விரைவில் தஞ்சாவூர்ச்சேனை அராலியையடைந்து அணிவகுத்துநின்றது. யாழ்ப்பாணிகள்சாடைக்கும் பறங்கியருக்குவிரோதமாயெழத்தொடங்கினர். ஒலிவேறாவின்சேனை தமிழருக்கு ஈடுசொல்லமாட்டாது இயங்கிக்கொண்

தமிழரின் கடைசிக்கலகம்,— தஞ்சாவூர் நாயக்கன் யாழ்ப்பாணத்தைச்செயிக்க இன்னுமொரு கடைசிப்பிரயத்தனஞ் செய்வானாயினான். அவனனுப்பிய சேனை பருத்தித்துறையில் இறங்கவிருக்கிறதெனக் கேள்வியுற்ற ஒலிவேறா, தெமோறு என்பவனோடு ஒருபறங்கியர் சேனையை அங்கனுப்பினான். ஆயின் தஞ்சாவூர்ச் சேனை வல்லுவெட்டித்துறைக் கரையினிறங்கி ஒர்குளக்கரையிலுள்ள பனந்தோப்பிற் பாளையமிட்டிருக்கிறதென அறிந்து தெமோறு அங்கு இரகசியமாய்ச்சென்று பதிவிருந்து மூன்றுஞ்சாமமாகும்போது போர்ப்பறை யறைந்து கூக்குரலிடத் தமிழர் இலைவிட்டுக் குதிரைகளிலேறி ஓடிப் போவோரும், திசைதப்பி அலைவோருமாய்க் கலங்குறப் பறங்கியர் பின்தொடர்ந்து 1200 பேரைச் சிரங்கொய்தனர். விழுந்துபட்டவர்களுள் யாழ்ப்பாணச் சிங்காசனம் வகிக்கும் நோக்கமாய் வந்திருந்தவனான சேனாநாயகமும் ஒருவனானான். இரண்டு நாட்களுள் தெமோறு கம்பங்களிற் குற்றிய பகைவர் சிரங்களோடும், பறித்தெடுத்தவாள், அம்பு வில், துப்பாக்கி யாதியவற்றோடும் தஞ்சாவூரினின்றும் பரிவாரமாய் வந்த மந்திரிகள், குதிரை, நாய், குரங்கு, கிளிப்பிள்ளை முதலியனவோடும், திரளான கைதிகளோடும் நல்லூரில் வந்துசேர்ந்தான். சிரங்கள் அடக்கஞ்செய்யவும் கைதிகள் அக்கால வழக்கப்படி ஏலத்திற்கூறிவிற்கவும்பட்டனர்.

யாழ்ப்பாண வைபவ கௌமுதி
65ம் பக்கம், 67ம் பக்கம்

விவாகஞ்செய்துகொண்டு இலங்கைக்குப் பிரபுராசாவாயினமையால் தனது இராச்சியத்துக்குச் சீவரத்தினமாகவுள்ள புத்ததசனத்தைக் கவர்ந்த ஆரியசக்கிரவர்த்தியை அடக்கவெண்ணி இருபதுவருஷமாகப்படைகூட்டியும் அரண்கள் அமைத்தும் ஆயதஞ்செய்துகொண்டு போருக்கு எழும்படி அறை கூவினான். ஆரியசக்கிரவர்த்தியும் போருக்காயத்தனாகிப் பெருநீர்ப்படையோடும் நிலப்படையோடும் அளகேசுவரனுடைய இராசதானியை நோக்கிப்போய்க் கொழும்பிலும் பாணந்துறையிலும் சேனைகளையிறக்கி அவனுடைய சேனையை எதிர்த்து வீரத்திறலோடு யுத்தஞ்செய்தான். அளகேசுவரன் ஆரியசக்கிரவர்த்தி சேனைகளையெல்லாம் நெருப்பிற்சேர்த்த பஞ்சாக்கினான். ஆரியசக்கிரவர்த்தி முதுகிட்டு யாழ்ப்பாணத்தை அடைந்து தொண்டைமானாற்றருகேயுள்ள பிலத்துவாரமண்டபத்தில் ஒளித்தான். பிலத்துவாரவாயிலிலே ஒரு மண்டபமும் சிறுமாளிகையுமிருந்தன. இப்பிலத்துவாரம் ஆபத்துக்குதவுமாறு முன் தமிழரசரால் அமைத்துவைக்கப்பட்டது. இதன் உள்வாய் சுண்ணந்தீற்றிச் சித்திரமெழுதப்பட்டிருந்ததென்பர். அதுவும் மண்டபமும் பிற்காலத்தில் சிதைக்கப்பட்டனவாயினும் பிலம் இன்றுமிருக்கின்றது. அது மண்டபமென்னும் பெயரால் வழங்குகின்றது. பராக்கிரமவாகுமகன் அவனைத் தொடர்ந்து சென்று நல்லூரை வளைந்து எதிர்த்த சேனையையெல்லாம் வாள்வீரரைக்கொண்டு சங்காரஞ்செய்து நகரத்து வீதிகளையெல்லாம் இரத்தவெள்ளம் பாயும் ஆறுகளாக்கி முடிவில் அரசனையுந் தேடிக்கொன்று அவன் மனைவிமக்களைச் சிறைசெய்து கொண்டுபோய்த் தனது தந்தையிடம் ஒப்புவித்தான்.

ஆரியசக்கிரவர்த்தியோடு யுத்தம்.

பிலத்துவாரம்.

ஆரியசக்கிரவர்த்தி கொலையுண்டது.

வெளியீடு:
வல்வை வரலாற்று
ஆவணக்காப்பகம்
கனடா
WWW.vvthistory.com